**28.01.2025**

STC.No. 145/2023 பீட்டர்லெனின் த/பெ. தாமஸ் PW1

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான விவரத்தை நான் தான் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் கண்டுள்ள சங்கதிகளும், எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.3 ல் எதிரி என்னிடம் வாங்கிய கடனை 5 மாதத்தில் திருப்பி தருவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது புகார் மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் 5 தவணையாக கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் 5 தவணையாக வட்டியுடன் சேர்த்து தருவதாக சொல்லியிருந்தார். நான் கேட்டரிங் படித்துள்ளேன். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். எனது பைனான்ஸ் பதிவு செய்யப்பட்ட உரிமம் செய்யப்பட்ட நிறுவனம் ஆகும். லியா பைனான்ஸ் என்ற பெயரில் 2019 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. எனது பைனான்சில் பொதுவாக யார் யாருக்கு எந்த தேதியில் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது, எவ்வளவு வட்டிக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரம் பதிவு செய்வது வழக்கம். எதிரிக்கு கொடுக்கப்பட்ட பணம் பைனான்ஸ் மூலம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் எதிரி என்னுடைய நண்பர் என்பதால் ஆவணம் எதுவும் பெறவில்லை. எனது புகார், பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் எதிரிக்கு பைனான்ஸ் மூலம் கடன் கொடுத்ததாகவும், உரிமம் எண் பற்றியும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக பைனான்ஸ் மூலம் கடன் கொடுக்கும்போது ஆவணம் பெறுவது பழக்கம், ஆனால் எதிரியிடம் ஆவணம் எதுவும் பெறவில்லை. எதிரிக்கு கொடுக்கப்பட்ட பணம் எனது பைனான்ஸ் கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். எதிரிக்கு பணம் கொடுத்த விவரங்களை எனது வருமான வரி கணக்கில் சொல்லியுள்ளேன். நான்

எதிரிக்கு பணம் கொடுத்தது குறித்த பதிவேடுகள் எனது தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்தது சம்மந்தமாக ஆவணமாக எதுவும் எழுதவில்லை. நான் 2009 முதல் 2011 வரை எதிரியின் வீட்டில் ஒத்திக்கு குடியிருந்தேன். அந்த வகையில் தான் எதிரி எனக்கு அறிமுகம். அதனால் எனது குடும்பத்தில் உள்ள அனைவரும் எதிரிக்கு நன்கு பரிட்சயம். எதிரிக்கு பணம் கொடுத்த விவரம் எனது குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் தெரியும். ம.சா.ஆ.1 காசோலையை எதிரி எனது வீட்டில் வைத்து வழங்கினார். ம.சா.ஆ.1ல் உள்ள விவரங்களை எதிரியே பூர்த்தி செய்து கொடுத்தார். எனக்கு CTS cheque, non CTS cheque குறித்த விவரம் எனக்கு தெரியாது. CTS cheque நடைமுறைக்கு வந்தபிறகு non CTS காசோலைகளை சம்மந்தப்பட்டவர் வங்கி பெற்றுக் கொண்டு CTS காசோலைகளை வழங்கி வந்தது என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. ம.சா.ஆ.1 காசோலையை எதிரி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் இந்த வழக்கு காசோலை உட்பட அந்த ஆண்டு வழங்கப்பட்ட காசோலை புத்தகத்தை எதிரி தனது வங்கியில் சரண்டர் செய்து புதிய காசோலை புத்தகத்தை பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2022ம் ஆண்டு CTS காசோலை தான் நடைமுறையில் இருந்தது என்றும், ம.சா.ஆ.1 காசோலை NON CTS காசோலை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய வட்டி குறித்து எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பா ஜெகன் பைனான்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வருகிறார். அந்த பைனான்சிற்கும் அரசாங்கத்தில் உரிமம் பெறப்பட்டுள்ளது. நான் எனது வழக்கில் சொல்லியுள்ளது போல் எதிரி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல. அந்த கடனை திரும்ப செலுத்துவதற்காக வழக்கு காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டு எனது தந்தையிடம் எதிரியின் உறவினர் ஒருவர் தான் கடன் பெற்றிருந்தார் என்றால் சரியல்ல. எதிரியின் உறவினரை எனது தகப்பனாரிடம் எதிரி

அறிமுகப்படுத்தியதற்காக எதிரியிடமிருந்து எனது தகப்பனார் வழக்கு காசோலையை பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரிடம் பெற்ற கடன் தொகையை எதிரியின் உறவினர் திரும்ப செலுத்திய பிறகும், எனது தகப்பனார் அந்த காசோலையை திரும்ப செலுத்தாமல் தவிர்த்து வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுத்த பழைய காசோலையை பயன்படுத்தி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது pan number எனக்கு ஞாபகமில்லை. எனது வருமான வரி கணக்குகளை ஆவணமாக தாக்கல் செய்ய விரும்புகிறேனா என்றால் இல்லை. எனது சாட்சியத்தில் சொல்லியுள்ளது போல் எதிரிக்கு எந்த கடன் தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பதிவு செய்யப்பட்ட உரிமம் பெற்றிருந்தும், அதை மறைத்து தனிப்பட்ட முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. சட்டப்படியான கடனுக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கூறப்பட்டுள்ளது போல் எதிரிக்கு எந்த மறுபயன் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/–செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி

/உண்மை நகல்/

S.RAJKUMAR Digitally signed by S.RAJKUMAR

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி